# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டம்

---

*[1982, ஜூலை மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, ஜூலை மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 1.10 தபாற் செலவு: சதம் 75

[1982, ஜூலை மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 19/81.
1519

இலங்கை திறத்தவர் ஒன்றாக வந்துள்ள வானூர்தியின் பாதுகாப்புத் தொடர்பிலான குறித்தசில சமவாயங்களை, அதாவது—

(அ) வானூர்தியினுள் புரியப்படும் தவறுகளும், குறித்தசில வேறு செயல்களும் பற்றிய 1963 செத்தெம்பர் 14 ஆம் தேதியன்று டோக்கியோவில் ஒப்பமிடப்பட்ட சமவாயத்தையும்;

(ஆ) வானூர்தியை சட்டவிரோதமாகக் கைப்பற்றுவதை ஒடுக்குவதற்கான 1970 திசெம்பர் 16 ஆம் தேதியன்று ஹேக்கில் ஒப்பமிடப்பட்ட சமவாயத்தையும்; அத்துடன்

(இ) குடியியல் வான் போக்குவரத்துப் பாதுகாப்புக்கு எதிரான சட்டவிரோத செயல்களை ஒடுக்குவதற்கான 1971 செத்தெம்பர் 23 ஆம் தேதியன்று மொன்றியலில் ஒப்பமிடப்பட்ட சமவாயத்தையும்,

பயனுறுத்துவதற்கும், அதனோடு தொடர்புபட்ட கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கை மேற்சொல்லப்பட்ட சமவாயங்களுக்கு திறத்தவர் ஒன்றாக வுள்ளதாதலாலும்: பாயிரம்.

அத்துடன், வானூர்திக்கு எதிராக அல்லது வானூர்தி தொடர்பில் புரியப்படும் குறித்தசில செயல்கள், நாடுகளின் சமூகத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பொதுவான சட்டநெறிகளுக்கிணங்க குற்றமுறையானவை என இந்த சமவாயங்களினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளனவாதலாலும்:

அத்துடன், இலங்கைச் சட்டத்தின்கீழ் இந்த செயல்களுக்கான தண்டனைக்கு ஏற்பாடுசெய்வதற்கு சருவதேசச் சட்டப்படி இலங்கை கடப்பாடுடையதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. (1) இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதிகளும்.

(2) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு, I ஆம் பாகம் ஆகியவற்றின் ஏற்பாடுகள் இச்சட்டம் சட்டமாக்கப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்கும்—

(அ) 1970 திசெம்பர் 16 ஆம் தேதியன்று ஹேக்கில் ஒப்பமிடப்பட்ட வானூர்தியை சட்டவிரோதமாக கைப்பற்றுவதை ஒடுக்குவதற்கான சமவாயமும்; அத்துடன்

(ஆ) 1971 செத்தெம்பர் 23 ஆம் தேதியன்று மொன்றியலில் ஒப்பமிடப் பட்ட குடியியல் வான் போக்குவரத்துப் பாதுகாப்புக்கு எதிரான சட்டவிரோத செயல்களை ஒடுக்குவதற்கான சமவாயமும்,

இலங்கை தொடர்பில் வலுவுக்கு வந்த தேதியாகிய 1978 யூலை 3 ஆம் தேதியன்றே நடைமுறைக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, அப்பாகத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்றதான ஏதேனும் செயலை அல்லது செய்யாமையை 1978 யூலை 3 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் புரிகின்ற ஆளெவரும் அப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய தவறுக்காக விளங்கப்படுவதற்கும் தண்டனையளிக்கப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரி.

2. வான் கலமோட்டல் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான் போக்குவரத்துப் பணிப்பாளரானவர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாகவிருத்தல் வேண்டும்.

## பாகம் I

சமவாயத்துக்கான ஒப்பந்தமுறு அரசுகளை அமைச்சர் சான்றுபடுத்துதல்.

3. சமவாயத்தின் நோக்கங்களுக்காக ஒப்பந்தமுறு அரசுகள் எவை என்பதை அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சான்றுபடுத்தலாம். அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் அவ்வாறு சான்றுபடுத்தப்பட்ட கருமங்கள் பற்றிய முடிவான சான்றாக இருத்தல் வேண்டும்.

இலங்கை வானூர்திகளுக்குள் புரியப்படும் தவறுகளின் மீது நீதிமன்றங்களின் நியாயாதிக்கம்.

4. (1) இலங்கை வானூர்தியொன்றுக்குள் பறந்துகொண்டிருக்கும்போது அல்லது ஆழ்கடலின் மேற்பரப்பில் அல்லது ஏதேனும் அரசின் ஆள்புலத்துக்கு வெளியேயுள்ள வேறேதேனும் இடப்பரப்பின் மேற்பரப்பில் புரியப்படுவதும் அல்லது இடம் பெறுவதும், இலங்கையில் புரியப்பட்டிருப்பின் அல்லது இடம்பெற்றிருப்பின் இலங்கைச் சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைந்திருக்கக் கூடியதும் ஆன ஏதேனும் செயல் அல்லது செய்யாமை, அத்தகைய செயல் அல்லது செய்யாமை இலங்கைப் பிரசை ஒருவரால் புரியப்பட்டதாயினுஞ்சரி இலங்கைப் பிரசை அல்லாத ஒருவரால் செய்யப்பட்டதாயினுஞ்சரி, அந்தத் தவறாக அமைதல் வேண்டும்.

(2) அரசியல் தன்மைத்தான அல்லது இன ஓரங்காட்டலை அல்லது சமய ஓரங்காட்டலை அடிப்படையாகக் கொண்டதான தவறொன்றல்லாது, இலங்கைச் சட்டத்தின்கீழான தவறொன்று, இலங்கை வானூர்தியொன்றுக்குள், பறந்து கொண்டிருக்கும்போது அல்லது ஆழ்கடலின் மேற்பரப்பில் அல்லது ஏதேனும் அரசின் ஆள்புலத்துக்கு வெளியேயுள்ள வேறேதேனும் இடப்பரப்பின் மேற்பரப்பில் புரியப்படுகின்றவிடத்து, அத்தகைய தவறானது, அது இலங்கையிற் புரியப்படின், இலங்கைச் சட்டத்தின்கீழ்—

(அ) நீதிவான் நீதிமன்றமொன்றினால் விளங்கப்படற்பாலதானதாக இருக்குமானால் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படற்பாலதானதாக இருக்குமானால் கொழும்பு நீதி நிருவாக வலயத்தில் நடைபெறுகின்ற மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும்.

5. இலங்கை வானூர்தியொன்றின் ஏவுநர் ஒவ்வொருவரும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட சமாதான அலுவலரொருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், 4 ஆம் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பில், அச்சட்டத்தினால் சமாதான அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவம் எதனையும் பிரயோகிக்கவும் செய்யலாம்.

இலங்கை வானூர்தியொன்றின் ஏவுநர், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட சமாதான அலுவலரொருவராகக் கருதப்படுதல்.

6. (1) சமவாயத்தின் III ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளாகவுள்ள இச்சட்டத்துக்கான அட்டவணையின் ஏற்பாடுகள் இலங்கை வானூர்தியொன்றுக்குள் அத்தகைய வானூர்தி பறந்துகொண்டிருக்கும்போது அல்லது ஆழ்கடலின் மேற்பரப்பில் அல்லது ஓர் அரசின் ஆள்புலத்துக்கு வெளியேயுள்ள வேறேதேனும் இடப்பரப்பில் புரியப்படும் தவறுகளும், செயல்களும் தொடர்பில் அத்தகைய இலங்கை வானூர்தி ஒன்றின் ஏவுநரொருவருக்குள்ள தத்துவங்கள் தொடர்பிலானவையாக இருக்கின்ற வரையில் அவ்வேற்பாடுகள் இலங்கையில் சட்ட வலுவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்துக்கான அட்டவணையின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தருப்பத்தில் அந்த அட்டவணையின் ஏற்பாடுகள் அத்தகைய வேறு சட்டத்தைவிட மேலோங்கி நிற்றல் வேண்டும்.

சமவாயத்தின் III ஆம் அத்தியாயத்தினது ஏற்பாடுகள் இலங்கையில் சட்ட வலுவைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது.

7. இச்சட்டத்துக்கான அட்டவணையின் ஏற்பாடுகளினால் இலங்கை வானூர்தி ஒன்றின் ஏவுநருக்கு அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்கள் அவரால் பிரயோகிக்கப்படுகையில் அவரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற ஆளெவரும், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

அட்டவணையின் ஏற்பாடுகளினால் வானூர்தி ஏவுநருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள் அவரால் பிரயோகிக்கப் படுகையில் அவரை எதிர்த்தலும் அவருக்கு முட்டுக்கட்டையிடுதலும் தவறொன்றாதல்.

8. இச்சட்டத்துக்கான அட்டவணையின் 6 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினால் இலங்கை வானூர்தியொன்றின் ஏவுநருக்கு அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்கள் அவரால் பிரயோகிக்கப்படுகையில், அந்த வானூர்திக்குள்ளிருக்கும் எவரேனும் ஆளை வலிந்து அடக்குவதற்கு அத்தகைய ஏவுநருக்கு உதவும்படி அத்தகைய ஏவுநரால் தேவைப்படுத்தப்படும்போது அல்லது அதிகாரமளிக்கப்படும்போது ஏவுநருக்கு அவ்வாறு உதவத் தவறுகின்ற அல்லது உதவ மறுக்கின்ற அத்தகைய இலங்கை வானூர்

வானூர்தி ஏவுநருக்கு உதவ மறுத்தல் அல்லது உதவத் தவறுதல் தவறொன்றாதல்.

தியொன்றினது பணியாளணியைச் சேர்ந்த உறுப்பினர் எவரும் இச் சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தவறுளி தரையிறங்குவது பற்றி அறிக்கை செய்ய அல்லது தவறுளியை ஒப்படைப்பதற்கான முன்னம் பற்றி அறிவிக்க வானூர்தி ஏவுநர் தவறுதல் தவறொன்றாகும்.

9. இச்சட்டத்துக்கான அட்டவணையின்—

(அ) எட்டாம் உறுப்புரையின் 2 ஆம் பிரிவின்; அல்லது

(ஆ) ஒன்பதாம் உறுப்புரையின் 2 ஆம் பிரிவின்,

ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற வானூர்தியொன்றின் ஏவுநர், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான தவறுகள்.

10. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியான ஆளெவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓராண்டுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) மேல் நீதிமன்றத்தினல் விளங்கப்படற்பாலதான தவறொன்று தொடர்பில், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினல் நீதிவானொருவருக்குத் தத்துவமொன்று அளிக்கப்படுமிடத்து அல்லது அவர்மீது கடமையொன்று சுமத்தப்படுமிடத்து, அத்தகைய தத்துவம் அல்லது கடமை, இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான தவறொன்று தொடர்பில் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினல் பிரயோகிக்கப்படுதலும் புரியப்படுதலும் வேண்டும்.

ஒப்பந்தமுறு அரசில் பதிவு செய்யப்பட்டுள்ள வானூர்தியின் ஏவுநர், சமவாயத்துக்கிணங்க ஆட்களைத் தரையிறக்குவதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு அனுமதிக்கப்படல்.

11. ஒப்பந்தமுறு அரசொன்றில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு வானூர்தியின் ஏவுநர், இச்சட்டத்துக்கான அட்டவணையின் 8 ஆம் உறுப்புரைக்கிணங்க எவரேனும் ஆளைத் தரையிறக்குவதற்கு அல்லது அட்டவணையின் 9 ஆம் உறுப்புரைக்கிணங்க எவரேனும் ஆளை ஒப்படைப்பதற்குத் தான் முன்னுகின்றுரென இலங்கையிலுள்ள தோதான அதிகாரிகளுக்கு அறிவிக்குமிடத்து, அத்தகைய ஏவுநர் தனது வானூர்தியை இலங்கையில் வந்து இறக்குவதற்கும், அத்தகைய ஆளை தரையிறக்குவதற்கும் அல்லது ஒப்படைப்பதற்கும் அனுமதிக்கப்படுதல் வேண்டும். இலங்கையிலுள்ள தோதான அதிகாரிகள், அவ்வாறு தரையிறக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட ஆளெவரையும் பொறுப்பிலெடுத்தல் வேண்டும்.

ஆளொருவர் ஒப்படைக்கப்பட்டதன் மேல் தகுதிவாய்ந்த அதிகாரியின் கடமைகள்.

12. (1) ஒப்பந்தமுறு அரசொன்றில் பதிவு செய்யப்பட்டுள்ள வானூர்தியொன்றின் ஏவுநரால் இலங்கையிலுள்ள தோதான அதிகாரிகளிடம் ஆளெவரும், இச்சட்டத்துக்கான அட்டவணையின் 9 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒப்படைக்கப்படுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரியானவர்—

(அ) நிகழ்வுகள் பற்றி பூர்வாங்க விசாரணையொன்றினைச் செய்தல் வேண்டும்;

(ஆ) அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஆள் எந்த அரசின் நாட்டினரொருவராகவுள்ளாரோ அந்த அரசின் ஆகக் கிட்டிய தோதான பிரதிநிதியுடன் தொடர்பு கொள்வதற்கு அத்தகைய ஆளுக்கு உதவுதல் வேண்டும்;

(இ) (i) எந்த ஒப்பந்தமுறு அரசில் அத்தகைய வானூர்தி பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த ஒப்பந்தமுறு அரசுக்கு;

(ii) அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஆள் இலங்கை நாட்டினரொருவரல்லாவிடின், அத்தகைய ஆளின் நாட்டின் அரசுக்கு;

(iii) வேறேதேனும் அக்கறை கொண்டுள்ள அரசுக்கு,

அத்தகைய ஆள் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்ற நிகழ்வு பற்றியும் அவர் தடுத்து வைக்கப்படுதலைத் தேவைப்படுத்தும் சூழ்நிலைகள் பற்றியும் அறிவிக்க வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பூர்வாங்க விசாரணை முடிவடைந்ததன் மேல், தகுதிவாய்ந்த அதிகாரி, அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அரசுகளுக்கு தனது முடிவெடுப்புக்களைப் பற்றி அறிக்கை செய்தல் வேண்டுமென்பதுடன், பூர்வாங்க விசாரணை தொடர்புபடுத்தும் தவறு மீது நியாயாதிக்கம் பிரயோகிப்பதற்கு இலங்கை முன்னுகின்றதா என்பதை அவர்களுக்கு குறிப்பிடுதலும் வேண்டும்.

*தரையிறக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட ஆளுக்கெதிராக குற்றவியல் அல்லது மீளொப்படைத்தல் நடவடிக்கைகள் எவையும் தொடரப்படவில்லையெனில், அவர் இலங்கையை விட்டுச் செல்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டுமென்பது.*

13. ஒப்பந்தமுறு அரசொன்றில் பதிவு செய்யப்பட்டுள்ள வானூர்தியொன்றின் ஏவுநரால் சமவாயத்தின் 8 ஆம் உறுப்புரைக்கிணங்க தரையிறக்கப்பட்ட அல்லது சமவாயத்தின் 9 ஆம் உறுப்புரைக்கிணங்க ஒப்படைக்கப்பட்ட—

(அ) ஆளெவருக்கும் எதிராக குற்றவியல் நடவடிக்கைகள் எவையும் தொடரப்படாதவிடத்தும்; அல்லது

(ஆ) ஆளொருவரை மீளொப்படைப்பதற்காக நடவடிக்கைகள் எவையும் தொடங்கப்படாதவிடத்தும்,

அத்துடன் அத்தகைய ஆள் தனது பிரயாணத்தைத் தொடர விரும்புகின்றவிடத்தும், அவர், தனது விருப்பத் தேர்விலான சேரிடம் ஒன்றுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய ஆள் தனது பிரயாணத்தைத் தொடருவதற்கு விரும்பவில்லையெனின், தகுதி வாய்ந்த அதிகாரியானவர், அத்தகைய ஆள் இலங்கைப் பிரசையொருவர் அல்லாவிடின், அவர் எந்த அரசின் நாட்டினரொருவராகவுள்ளாரோ அல்லது எந்த அரசில் நிரந்தர வதிவுடையவராகவுள்ளாரோ அந்த அரசுக்கு அல்லது எந்த அரசிலிருந்து அவர் தமது ஆகாயமார்க்கமான பிரயாணத்தைத் தொடங்கியுள்ளாரோ அந்த அரசுக்கு அவரை திருப்பியனுப்புதல் வேண்டும்.

*தரையிறக்குகை அல்லது ஒப்படைப்பு இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதியாகக் கருதப்படுதலாகாது என்பது.*

14. ஆளொருவர், சமவாயத்தின் 9 ஆம் உறுப்புரைக்கிணங்க, இலங்கையிலுள்ள தோதான அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றார் என்ற காரணத்தினால் மட்டும் அல்லது சமவாயத்தின் 8 ஆம் உறுப்புரைக்கிணங்க இலங்கையில் அவர் தரையிறக்கப்பட்டிருக்கின்றார் என்ற காரணத்தினால் மட்டும், இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றாரெனக் கருதப்படுதலாகாது.

ஒப்பந்தமுறு அரசில் பதிவு செய்யப்பட்டுள்ள வானூர்தியில் புரியப்படுகின்ற தவறுகள் அந்த அரசில் புரியப் பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பது.

15. ஒப்பந்தமுறு அரசொன்றில் பதிவு செய்யப்பட்டுள்ள வானூர்தியொன்றினுள் புரியப்படுவதும், அந்த அரசின் சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைவதும் ஆன ஏதேனும் செயலானது, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக அந்த அரசின் நியாயாதிக்கத்திற்குள் புரியப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்.

16. இச்சட்டத்தின் இப்பாகத்தில்—

"சமவாயம்" என்பது, வானூர்திக்குள் புரியப்படும் தவறுகளும் வேறு குறித்த சில செயல்களும் பற்றி 1963, செத்தெம்பர் 14 ஆம் தேதியன்று டோக்கியோவில் ஒப்பமிடப்பட்ட சமவாயம் எனப் பொருளாகும்;

"ஒப்பந்தமுறு அரசு" என்பது, சமவாயத்திற்குத் திறத்தவரொருவராகவுள்ள ஓர் அரசு எனப் பொருளாகும்;

வானூர்தி ஒன்று தொடர்பில், "பறந்துகொண்டிருக்கும்போது" என்பது, வானூர்தி மேலெழும்புவதன் நோக்கத்திற்காக விசை பிரயோகிக்கப்படும் சமயத்தில் தொடங்கி வந்திறங்கலோட்டம் பூர்த்தியாகின்ற சமயத்தில் முடிவடையும் காலப்பகுதி எனப் பொருளாகும்;

"இலங்கை வானூர்தி" என்பது, இராணுவ, சுங்க, பொலிசு சேவைகளில் பயன்படுத்தப்படும் வானூர்தி ஒன்றல்லாத, வான்கலமோட்டல் சட்டத்தின்கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு வானூர்தி எனப் பொருளாகும்.

## பாகம் II

வானூர்திக்குள் அல்லது வானூர்திக் கெதிராகப் புரியப்படும் தவறுகள்.

17. (1) (அ) பறந்துகொண்டிருக்கும் இலங்கை வானூர்தி ஒன்றில் இருந்துகொண்டு வலோற்காரத்தின்மூலம் அல்லது அச்சுறுத்தலின்மூலம் அல்லது வேறு ஏதேனும் வகையான பயமுறுத்தல்மூலம் சட்டவிரோதமாக அவ்வானூர்தியைக் கைப்பற்றுகின்ற அல்லது அவ்வானூர்தியின்மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற;

(ஆ) பறந்துகொண்டிருக்கும் இலங்கை வானூர்தி ஒன்றில் இருக்கும் ஆள் ஒருவருக்கெதிராக, அவ்வானூர்தியின் பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தக்கூடியவிதமாக ஏதேனும் அத்தகைய வன்செயலை சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் புரிகின்ற; அல்லது

(இ) சேவையிலுள்ள இலங்கை வானூர்தியொன்றை சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் அழிக்கின்ற; அல்லது

(ஈ) சேவையிலுள்ள இலங்கை வானூர்தியொன்றைப் பறக்க முடியாததாக்கும் அல்லது பறக்கும்போது அதன் பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தக்கூடியதாக்கும் அத்தகைய சேதத்தை அதற்குச் சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் விளைவிக்கின்ற ; அல்லது

(உ) சேவையிலுள்ள இலங்கை வானூர்தியில்—

(i) அவ்வானூர்தியை அழிக்கக்கூடிய ; அல்லது

(ii) அதனைப் பறக்கமுடியாததாக்கும் அல்லது பறக்கும்போது அதன் பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தக்கூடியதாக்கும் அத்தகைய சேதத்தை விளைவிக்கக்கூடிய,

ஏதேனும் கருவியை அல்லது பொருளை எத்தன்மைத்தான எவ்வழிகள்மூலமேனும் சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் வைக்கின்ற அல்லது வைப்பிக்கின்ற ; அல்லது

(ஊ) பறந்துகொண்டிருக்கும் இலங்கை வானூர்தியொன்றின் பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தக்கூடியதாக்கும் விதமாக சருவதேச வான் கலமோட்டலில் பயன்படுத்தப்படும் வான் கலமோட்டல் வசதிகள் எவற்றுக்கேனும் சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் அத்தகைய சேதத்தை விளைவிக்கின்ற அல்லது அழிவை ஏற்படுத்துகின்ற அல்லது அதன் தொழிற்பாட்டில் அவ்வாறு தலையிடுகின்ற ; அல்லது

(எ) பறந்துகொண்டிருக்கும் இலங்கை வானூர்தியொன்றின் பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தும், பொய்யானதென அவர் அறிந்த தகவலை சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் தெரிவிக்கின்ற,

ஆள் எவரும் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், கொழும்பில் நடாத்தப்படும் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயுட்காலச் சிறைத் தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற அல்லது அத்தவறு புரியப்படுதலுக்கு உடந்தையாக இருக்கின்ற ஆள் எவரும் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், கொழும்பில் நடாத்தப்படும் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் முதலிற் கூறப்பட்ட தவறுக்கு விதித்துரைக்கப்பட்ட அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

இப்பிரிவில் "உடந்தை" என்பது தண்டனைச் சட்டக்கோவையின் 100, 101 ஆகிய பிரிவுகளிலுள்ள அதே பொருளை உடையதாகும்.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான தவறொன்று, கொழும்பு நீதி நிருவாக வலயத்தில் நடைபெறும் மேல் நீதிமன்றத்தின் முன்னர் விளங்கப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான தவறுகள் பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறுகளாதலும் பிணையில் செல்லவிட முடியாத் தவறுகளாதலும்.

18. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான தவறு ஒவ்வொன்றும் அச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும்—

(அ) பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றாதல் வேண்டும்;

(ஆ) பிணையிற் செல்லவிடமுடியாத் தவறொன்றாதல் வேண்டும்;

அத்துடன், 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறை (சிறப்பேற்பாடுகள்) சட்டம் வலுவிலிருக்கும்வரை அத்தகைய தவறு ஒவ்வொன்றும் அச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படற்பாலதான தவறொன்று தொடர்பில், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் நீதிவானொருவருக்குத் தத்துவமொன்று அளிக்கப்படுமிடத்து அல்லது அவர்மீது கடமையொன்று சுமத்தப்படுமிடத்து, அத்தகைய தத்துவம் அல்லது கடமை, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான தவறொன்று தொடர்பில் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதலும் புரியப்படுதலும் வேண்டும்.

வெளிநாட்டு வானூர்தியில் இருந்துகொண்டு அல்லது வெளிநாட்டு வானூர்தி தொடர்பில் புரியப்பட்ட செயல்கள் தவறுகளாகக் கருதப்படுதல்.

19. (1) வெளிநாட்டு வானூர்தியொன்றில் இருந்துகொண்டு அல்லது வெளிநாட்டு வானூர்தி தொடர்பில், 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் அல்லது (ஈ) என்னும் பந்தியில் அல்லது (உ) என்னும் பந்தியில் அல்லது (ஊ) என்னும் பந்தியில் அல்லது (எ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்ற எதேனும் செயலை இலங்கைக்கு வெளியே புரிகின்ற ஆளெவரும், அவர் ஓர் இலங்கைப் பிரசையாக இருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஆயுட்கால மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற அல்லது அத்தவறைப் புரிவதற்கு உடந்தையாயிருக்கின்ற ஆளெவரும் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் முதலில் குறிப்பிடப்பட்ட தவறுக்கென விதித்துரைக்கப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

இவ்வுட்பிரிவில் "உடந்தை" என்பது, தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம், 101 ஆம் பிரிவுகளிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(3) இலங்கையிலுள்ள நீதிமன்றம் எதுவும் பின்வரும் விடயங்களிற் தவிர, அதாவது—

(அ) தவறொன்றாக அமைகின்றதான செயல் இலங்கையில் புரியப்பட்டுள்ளவிடத்து ; அல்லது

(ஆ) தவறொன்றாக அமைகின்றதான செயல் எந்த வெளிநாட்டு வானூர்தியில் இருந்துகொண்டு அல்லது எந்த வெளிநாட்டு வானூர்தி தொடர்பில் புரியப்பட்டதோ அந்த வெளிநாட்டு வானூர்தி சார்த்தப்பட்ட தவறாளியை வார்னூர்தியில் வைத்துக்கொண்டு இலங்கையில் வந்திறங்குகின்றவிடத்து ; அல்லது

(இ) தவறொன்றாக அமைகின்றதான செயல் எந்த வெளிநாட்டு வானூர்தியில் இருந்துகொண்டு அல்லது எந்த வெளிநாட்டு வானூர்தி தொடர்பில் புரியப்பட்டுள்ளதோ அந்த வெளிநாட்டு வானூர்தி, தமது பிரதான தொழிலிடத்தை இலங்கையிற் கொண்டிருக்கின்றவரான அல்லது (அவர் அத்தகைய தொழிலிடத்தைக் கொண்டில்லாவிடில்) தமது நிரந்தரமான வதிவிடத்தை இலங்கையிற் கொண்டிருக்கின்றவரான குத்தகைப் பெறுநர் ஒருவருக்கு, பணியாளணி இன்றி குத்தகைக்கு விடப்பட்டுள்ள விடத்து ; அல்லது

(ஈ) அத்தகைய தவறொன்றாக அமைகின்றதான செயல், வெளிநாட்டு வானூர்தியொன்று தொடர்பில் புரியப்பட்டுள்ளதும், 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் அல்லது (ஈ) என்னும் பந்தியில் அல்லது (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றதும் அல்லது அத்தகைய ஏதேனும் செயலைப் புரிய எத்தனிப்பதும் அல்லது புரிவதற்கு உடந்தையளிப்பதும் ஆன செயலொன்றாகவிருக்குமிடத்து அத்தகைய செயலைப் புரிகின்ற ஆள் இலங்கையில் சமுகமாயிருப்பாராயின்,

இப்பிரிவின்கீழ் அத்தகைய தவறை விளங்குவதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டதாயிருத்தல் ஆகாது.

**இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் எவரேனும் ஆளைக் கைது செய்ததன் பேரில் தகுதி வாய்ந்த அதிகாரி பூர்வாங்க விசாரணை செய்தல்.**

20. இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான ஒரு தவறுக்காக எவரேனும் ஆள் கைதுசெய்யப்பட்டுள்ளவிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி நிகழ்வுகள் பற்றிய பூர்வாங்க விசாரணையொன்றைச் செய்தல் வேண்டும்; அத்துடன் கைதுசெய்யப்பட்ட ஆள் இலங்கை நாட்டினரல்லராயின், அவர் எந்த அரசின் நாட்டினரோ அந்த அரசுக்கான ஆகக்கிட்டிய தோதான பிரதிநிதியுடன் அவர் தொடர்புகொள்ள அவருக்கு உதவியளித்தல் வேண்டும்.

தகுதி வாய்ந்த அதிகாரியின் கடமைகள்.

21. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான ஒரு தவறுக்காக எவரேனும் ஆள் கைதுசெய்யப்பட்டவிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய ஆள் கைதுசெய்யப்பட்டுள்ளாரென்பதையும் அவர் கைதுசெய்யப்படுவதனை அவசியமாக்கும் சூழ்நிலைகளைப் பற்றியும்—

(அ) அத்தகைய ஆள் இலங்கை நாட்டினரல்லராயின் அவ்வாள் எந்த அரசின் நாட்டினரோ அந்த அரசுக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஆ) எந்த வானூர்தியில் இருந்துகொண்டு அல்லது எந்த வானூர்தி தொடர்பாக அத்தகைய தவறு புரியப்பட்டுள்ளதோ அந்த வானூர்தி ஒரு வெளிநாட்டு வானூர்தியாயின், அவ்வானூர்தி பதிவுசெய்யப்பட்ட அரசுக்கு அறிவித்தல் வேண்டும்;

(இ) எந்த வானூர்தியில் இருந்துகொண்டு அல்லது வானூர்தி தொடர்பாக அத்தகைய தவறு புரியப்பட்டுள்ளதோ அந்த வானூர்தி பணியாளணி இன்றி குத்தகைக்காரர் ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், அத்தகைய குத்தகைக்காரர் தமது பிரதான தொழிலிடத்தைக் கொண்டுள்ள அரசுக்கு அறிவித்தல் வேண்டும், அல்லது அவர் அத்தகைய தொழிலிடத்தைக் கொண்டிரா விட்டால், அக்குத்தகைக்காரர் தமது நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள அரசுக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஈ) அக்கறையுள்ள வேறு ஏதேனும் அரசுக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) இருபதாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பூர்வாங்க விசாரணை முடிவடைந்ததன்மேல், தகுதிவாய்ந்த அதிகாரி (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அரசுகளுக்கு தமது முடிவெடுப்புக்களைப் பற்றி அறிக்கைசெய்தல் வேண்டும் என்பதுடன், எத்தவறு தொடர்பாக பூர்வாங்க விசாரணை நடாத்தப்பட்டதோ அத்தவறின்மீது இலங்கை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கக் கருதுகின்றதா என்பது பற்றிக் குறிப்பிடுதலும் வேண்டும்.

1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தைத் திருத்துதல்.

22. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டம், அச்சட்டத்துக்கான அட்டவணையின் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (32) பறந்துகொண்டிருக்கும் வானூர்தியொன்றைச் சட்டவிரோதமாகக் கைப்பற்றுதல் அல்லது அதன்மீது கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்.

(33) வானூர்தியொன்றன் பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தும் சாத்தியம்கொண்ட அத்தகைய விதமாக பறந்துகொண்டிருக்கும் வானூர்தியொன்றில் இருக்கும் ஆள் ஒருவருக்கெதிரான வன்செயல்கள்.

(34) சேவையிலுள்ள வானூர்தியொன்று பறந்துகொண்டிருக்கும் போது அதன் பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தக்கூடிய விதமாக அதனை அழித்தல் அல்லது அதற்கு ஆபத்து விளைத்தல்.

(35) சேவையிலுள்ள வானூர்திக்கு அழிவை அல்லது சேதத்தை விளைவிக்கக்கூடிய விதமாக அதில் கருவியை அல்லது பொருளை வைத்தல்.

(36) சருவதேச வான் கலமோட்டலுக்குப் பயன்படுத்தப்படும் வான் கலமோட்டல் வசதிகளை அழித்தல், அவற்றுக்குச் சேதம் விளைவித்தல் அல்லது அவற்றுடன் தலையிடுதல்.

(37) வானூர்தியின் பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தும்வகையில் பொய்யான தகவலைத் தெரிவித்தல்.".

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினுல், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்துக்குச் செய்யப்படும் திருத்தம் 1978 யூலை 3 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

சமவாயம், இலங்கை அரசாங்கத்துக்கும் ஹேக் அல்லது மொன்றியல் சமவாயங்களுக்குத் திறத்தவர்களாகவுள்ள அரசுகளின் அரசாங்கங்களுக்கும் இடையே மீள ஒப்படைத்தல் உடன்பாட்டொழுங்கை அமைத்துக் கொள்ளுதல்.

23. (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, ஹேக் சமவாயமானது, இலங்கை அரசாங்கத்துக்கும் அத்தகைய சமவாயத்துக்குத் திறத்தவராகவுள்ள அரசின் அரசாங்கத்துக்குமிடையே மீள ஒப்படைத்தற்கான உடன்பாட்டொழுங்கொன்ருக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் அச்சட்டத்தின் 4 ஆம் பிரிவில் அல்லது அதன் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) அத்தகைய சமவாயம், 1978 யூலை 3 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய அரசு தொடர்பில் வலுவுடையதாக வந்திருப்பின் 1978 யூலை 3 ஆம் தேதியிலிருந்து ; அல்லது

(ஆ) அத்தகைய சமவாயம், 1978 யூலை 3 ஆம் தேதியின் பின்னர் அத்தகையதொரு அரசு தொடர்பில் வலுவுடையதாக வந்திருப்பின், அத்தகைய அரசு தொடர்பில் அத்தகைய சமவாயம் வலுவுடையதாக வந்த தேதியிலிருந்து,

அந்த அரசு தொடர்பில் அச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் அமைச்சர் கட்டளையொன்றை ஆக்கியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் பாராளுமன்றத்தினுல் அங்கிகரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், எல்லா நோக்கங்களுக்காகவும் இறுதியானதும் முடிவானதுமாதலும் வேண்டும். இவ்வுட்பிரிவின்கீழ் எந்த அரசு தொடர்பாகக் கட்டளையொன்று ஆக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றதோ அந்த அரசு, அச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒப்பந்த அரசொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, மொன்றியல் சமவாயமானது இலங்கை அரசாங்கத்துக்கும் அத்தகைய சமவாயத்துக்குத் திறத்தவராகவுள்ள அரசின் அரசாங்கத்துக்குமிடையே மீள ஒப்படைத்தற்கான உடன்பாட்டொழுங்கொன்ருக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் அச்சட்டத்தின் 4 ஆம் பிரிவில் அல்லது அதன் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) அத்தகைய சமவாயம் 1978 யூலை 3 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய அரசு தொடர்பில் வலுவுடையதாக வந்திருப்பின் 1978 யூலை 3 ஆம் தேதியிலிருந்து ; அல்லது

(ஆ) அத்தகைய சமவாயம் 1978 யூலை 3 ஆம் தேதியின் பின்னர் அத்தகைய அரசு தொடர்பில் வலுவுடையதாக வந்திருப்பின் அத்தகைய அரசு தொடர்பில் அத்தகைய சமவாயம் வலுவுடையதாக வந்த தேதியிலிருந்து

அந்த அரசு தொடர்பில் அச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் அமைச்சர் கட்டளையொன்றை ஆக்கியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும். அத் தகைய கட்டளை ஒவ்வொன்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் எல்லா நோக் கங்களுக்காகவும் இறுதியானதும் முடிவானதுமாதலும் வேண்டும். இவ் வுட்பிரிவின்கீழ் எந்த அரசு தொடர்பாகக் கட்டளையொன்று ஆக்கப் பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றதோ அந்த அரசு அச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒப்பந்த அரசொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் அரசு ஹேக் சமவாயத்துக்கான அல்லது மொன்றியல் சமவாயத்துக்கான திறத்தவரொருவராக இருக்கின்றது என்ற பயன் படும் அல்லது ஏதேனும் அரசு தொடர்பில் ஏதேனும் அத்தகைய சம வாயம் வலுவுடையதாக வந்திருக்கும் தேதியைக் குறித்துரைக்கும் வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச் சரின் அமைச்சுச் செயலாளரின் கைப்பட்ட சான்றிதழொன்று 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் கீழான எவையேனும் நடவடிக்கைகளில் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற் பாலதாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் கூறப்பட்ட விடயங்களின் முடிவான சான்றாதலும் வேண்டும்.

மீள ஒப்படைத்தல் தொடர்பிலான ஏற்பாடு.

24. (அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்ற; அத்துடன்

(ஆ) வேறேதேனும் அரசினது சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்ற,

வானூர்தியொன்றில் இருந்துகொண்டு அல்லது வானூர்தி தொடர்பாகப் புரியப்பட்ட ஏதேனும் செயல், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அச்செயல் எந்த அரசி னது நியாயாதிக்கத்தினுட் புரியப்பட்டதோ அந்நியாயாதிக்கத்தினுள் மட்டுமன்றி அத்தகைய வேறு அரசின் நியாயாதிக்கத்தினுள்ளும் புரியப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

மீள ஒப்படைத்தல் தொடர்பிலான சிறப்பு ஏற்பாடு.

25. (1) ஐயுறவுகளைத் தீர்த்துவைப்பதற்காக, சட்டத்தின் இப்பாகத் திற் குறிப்பீடு செய்யப்பட்டதும் 1978 யூலை 3 ஆந் தேதிக்குப் பின்னர் எந்நேரத்திலேனும் புரியப்பட்டிருப்பதாகச் சார்த்தப்படுவதுமான தவ றொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படும் ஆள் ஒருவரை மீள ஒப்படைப்பதற் காக 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் கீழ் வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டவிடத்து, அத்தகைய தவறானது, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக் கங்களுக்காக, மீள ஒப்படைத்தற்குரிய தவறு ஒன்றாகுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(2) (அ) எத்தவறு தொடர்பாக மீள ஒப்படைத்தற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதோ அத்தவறு ;

(ஆ) பாரப்படுத்தும் நீதிமன்றத்தின்முன்னர் தாபிக்கப்பட்ட நிகழ்வுகள்மூலம் எண்பிக்கப்பட்ட ஏதேனும் குறைந்த தவறு ; அல்லது

(இ) எத்தவறு தொடர்பில் அவரை அவ்வாறு கையாள இலங்கை அரசாங்கம் சம்மதிக்குமோ அத்தகைய மீள ஒப்படைத்தற் குரிய தவறாகவுள்ள வேறு ஏதேனும் தவறு,

தவிர்ந்த, அவர் மீள ஒப்படைக்கப்படுவதன்முன்னர் புரியப்பட்ட ஏதேனும் தவறுக்காக அல்லது தவறு தொடர்பில் அத்தகைய ஆள் அந்த அரசினுள் கைதுசெய்யப்படமாட்டார், தடுத்துவைக்கப்படமாட்டார், விளக்கமறியலில் வைக்கப்படமாட்டார் அல்லது வேறு வகையாகக் கையாளப்படமாட்டார் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அந்த அரசின் சட்டத்தில் ஏற்பாடு இருக்குமாயின் அல்லது அந்த அரசின் அரசாங்கம் பொறுப்பேற்பொன்றைத் தந்துள்ளதென வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் சான்றுப்படுத்தினால், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் 7(3) ஆம் பிரிவிலுள்ளது எதுவும், அச்சட்டத்தின்கீழ் எவ்வாளை மீள ஒப்படைப்பதற்கு ஒப்பந்த அரசொன்றினால் வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டுள்ளதோ அவ்வாளுக்கு அல்லது அவ்வாள் தொடர்பில் ஏற்புடையதாகாது.

26. இச்சட்டத்தின் இப்பாகத்தில்— பொருள் கோடல்.

"வெளிநாட்டு வானூர்தி" என்பது இராணுவ, சுங்க அல்லது பொலிசுச் சேவைகளில் பயன்படுத்தப்படும் வானூர்தியொன்றாகவிராத, இலங்கை தவிர்ந்த வேறு அரசில் பதிவுசெய்யப்பட்ட வானூர்தி ஒன்று எனப் பொருளாகும்;

"ஹேக் சமவாயம்" என்பது 1970 திசம்பர் 16 ஆந் தேதியன்று ஹேக்கில் ஒப்பமிடப்பட்ட, வானூர்திகளைச் சட்டவிரோதமாகக் கைப்பற்றுவதனை ஒடுக்குவதற்கான சமவாயம் என்று பொருளாகும்;

வானூர்தியொன்று தொடர்பில் "பறந்துகொண்டிருக்கும்போது" என்பது, வானூர்தியினுள் ஏறியதைத் தொடர்ந்து வானூர்தியின் வெளிக்கதவுகள் மூடப்பட்ட நேரத்தில் தொடங்கி தரை இறங்கும் நோக்கங்களுக்காக அத்தகைய ஏதேனும் கதவு திறக்கப்படும் நேரத்தில் முடிவடையும் காலப்பகுதி என்று பொருளாகும்; அத்துடன் பறந்துகொண்டிருக்கும்போது வானூர்தி வலுக்கட்டாயமாக வந்திறங்கும் நேரத்தில் தொடங்கி அவ் வானூர்திக்கும், அவ்வானூர்தியில் இருக்கும் ஆட்களுக்கும் ஆதனத்துக்குமான பொறுப்பைத் தோதான அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் முடிவடையும் காலப்பகுதியையும் உள்ளடக்கும்;

வானூர்தி ஒன்று தொடர்பாக "சேவையில் உள்ள" என்பது, தரை ஆளணியினரால் அல்லது வானூர்திப் பணியாளணியினால் குறித்துரைக்கப்பட்ட பறத்தற் பயணமொன்றுக்காக வானூர்தியைத் தயார் செய்யும் நேரத்தில் தொடங்கி வானூர்தி வந்திறங்கும் நேரத்திலிருந்து இருபத்திநாலு மணித்தியாலங்கள் கழிந்ததும் முடிவடையும் காலப்பகுதி என்று பொருளாவதோடு வானூர்தி பறந்துகொண்டிருக்கும் காலப்பகுதியையும் உள்ளடக்கும்;

"மொன்றியல் சமவாயம்" என்பது 1971 செத்தெம்பர் 23 ஆந் தேதியன்று மொன்றியலில் ஒப்பமிடப்பட்ட, குடியியல் வான் போக்குவரத்துப் பாதுகாப்புக்கெதிரான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குவதற்கான சமவாயம் என்று பொருளாகும்;

"இலங்கை வானூர்தி" என்பது இராணுவ, சுங்க அல்லது பொலிசுச் சேவைகளில் பயன்படுத்தப்படும் வானூர்தி ஒன்றாக இராத, வான் கலமோட்டல் சட்டத்தின்கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வானூர்தி ஒன்றென்று பொருளாகும்.

அட்டவணை

**1963 ஆம் ஆண்டு செத்தெம்பர் 14 ஆம் தேதி டோக்கியோவில் ஒப்பமிடப்பட்ட வானூர்தியில் இருக்கும்போது புரியப்படும் தவறுகள், அத்துடன் வேறு குறித்த சில செயல்கள் என்பவற்றின் மீதான சமவாயத்தின் III ஆம் அத்தியாயம்.**

வானூர்தி ஏவுநரின் தத்துவங்கள்

உறுப்புரை 5

1. வானூர்தி கடைசியாக எந்த இடத்திலிருந்து புறப்பட்டதோ அந்த இடம், அல்லது வந்திறங்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் அடுத்த இடம், பதிவு செய்யப்பட்ட அரசில் அல்லாது வேறு ஓர் அரசில் அமைந்திருந்தாலொழிய, அல்லது அவ்வானூர்தி, ஆளொருவர் இருக்கும்போதே பதிவுசெய்யப்பட்ட அரசு அல்லாத வேறு ஓர் அரசின் வான்வெளியில் அடுத்துறும் வகையில் பறந்தாலொழிய பதிவுசெய்யப்பட்ட அரசின் வான்வெளியில் அல்லது ஆழ்கடலுக்கு மேலாக அல்லது ஏதேனும் அரசின் ஆள்புலத்திற்கு வெளியே வேறு ஏதேனும் இடப்பரப்பிற்கு மேலாகப் பறந்துகொண்டிருக்கும் வானூர்தியொன்றின் உள்ளேயிருக்கும் அத்தகைய ஆளினால் புரியப்பட்ட அல்லது புரியப்படவிருக்கும் தவறுகளுக்கும் செயல்களுக்கும் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாகா.

2. முதலாம் உறுப்புரையின் 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்கென ஒரு வானூர்தியானது பயணிகள் உள்ளே நுழைந்ததையடுத்து அதன் எல்லா வெளிப்புறக் கதவுகளும் மூடப்பட்ட நேரத்திலிருந்து பயணிகள் தரையிறங்குவதற்கென அத்தகைய ஏதேனும் கதவு திறக்கப்படும் நேரம் வரையிலான ஏதேனும் நேரத்தில் பறந்து கொண்டிருப்பதாகவே கருதப்படுதல் வேண்டும். வலுக்கட்டாயமான வந்திறங்குகை ஒன்றின் விடயத்தில் வானூர்தியுள்ளே புரியப்படும் தவறுகளும் செயல்களும் தொடர்பில், அரசொன்றின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் வானூர்திக்கும் அதனுள்ளிருக்கும் ஆட்களுக்கும் ஆதனத்துக்குமான பொறுப்பைக் கையேற்கும்வரை இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் தொடர்ந்து ஏற்புடையன வாதல் வேண்டும்.

உறுப்புரை 6

1. வானூர்தி ஏவுநர், அவருக்கு 1 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியில் கருதப்பட்ட ஒரு தவறை அல்லது செயலை ஆளொருவர் வானூர்தியுள்ளே புரிந்துள்ளார் அல்லது புரியவிருக்கின்றார் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்து,—

(அ) வானூர்தியின் அல்லது அதன்கண் உள்ள ஆட்களின் அல்லது ஆதனத்தின் பாதுகாப்பைக் காப்பாற்றுவதற்கு; அல்லது

(ஆ) வானூர்தியுள்ளே நல்லொழுங்கையும் ஒழுக்காற்றையும் பேணுவதற்கு; அல்லது

(இ) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய ஆளை தகுதி வாய்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைப்பதை அல்லது அவரைத் தரை இறக்கிவிடுவதை ஏவுநருக்கு இயலச்செய்வதற்கு,

அவசியமான தடை உட்பட அந்தகைய ஆளின்மீது நியாயமான வழிமுறைகளைச் சுமத்தலாம்.

2. வானூர்தி ஏவுநர், எந்த ஆளைத் தடைப்படுத்துவதற்கு அவர் உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்த ஆளெவரையும் தடைப்படுத்துவதற்கு வானூர்திப் பணியாளணியின் வேறு உறுப்பினர்களின் உதவியைத் தேவைப் படுத்தலாம், அல்லது அதிகாரமளிக்கலாம் என்பதுடன் பயணிகளின் உதவியை வேண்டிநிற்கலாம். அல்லது அதிகாரமளிக்கலாம், ஆனால் தேவைப்படுத்தலாகாது. வானூர்திப் பணியாளணியின் எவரேனும் உறுப்பினரும் அல்லது பயணியும், வானூர்தியை அல்லது அதன்கண் உள்ள ஆட்களின் அல்லது ஆதனத்தின் பாதுகாப்பைக் காப்பாற்றுவதற்கு, அத்தகைய செயல் உடனடியாக அவசியப் படுகிறது என நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் இருக்கும்போது அத்தகைய அதிகாரமளிப்பு இல்லாமலேயே நியாயமான தடுப்பு வழிமுறையை மேற்கொள்ளலாம்.

### உறுப்புரை 7

1. ஆறும் உறுப்புரைக்கிணங்க ஆளொருவர்மீது சுமத்தப்பட்ட தடைப்படுத்தற்கான வழிமுறைகள் :

(அ) ஏதேனும் இடம் ஒப்பந்தம் செய்து கொள்ளாத ஓர் அரசின் ஆள்புலத்தில் இருந்தாலன்றியும் அத்துடன் அதன் அதிகாரிகள் அத்தகைய ஆள் தரை இறக்கிவிடப்படுவதை அனுமதிக்க மறுத்தாலன்றியும் அல்லது அவரைத் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைப்பதனை இயலச் செய்வதற்கென 6 ஆம் உறுப்புரையின் 1 (இ) என்னும் பந்திக்கிணங்க அத்தகைய வழிமுறைகள் சுமத்தப்பட்டிருந்தாலன்றியும் ;

(ஆ) வானூர்தி வலுக்கட்டாயமான வந்திறங்குகையைச் செய்தாலன்றியும் அத்துடன் வானூர்தி ஏவுநர் அவ்வாளைத் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்க இயலாதவராக இருந்தாலன்றியும் ; அல்லது

(இ) அவ்வாள் தடையின்கீழ் தொடர்ந்து கொண்டுசெல்லப்படுவதற்கு உடன்பட்டாலன்றியும்,

அந்தகைய வானூர்தி வந்திறங்கும் ஏதேனும் இடத்துக்கு அப்பால் தொடரப்படுதல் ஆகாது.

2. வானூர்தி ஏவுநர், சாத்தியப்படக்கூடியவாறான விரைவில் அத்துடன் இயலுமாயின், 6 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தடையின்கீழ் வைக்கப்பட்டுள்ளவரும் வானூர்தியின் உள்ளே இருப்பவருமான ஆளொருவருடன் அரசொன்றின் ஆள்புலத்தில் வந்திறங்குமுன்னர், வானூர்தியுள்ளே ஆளொருவர் தடையின்கீழ் இருக்கின்றார் என்ற நிகழ்வையும் அத்துடன் அத்தகைய தடைக்கான காரணங்களையும் அத்தகைய அரசின் அதிகாரிகளுக்கு அறிவித்தல் வேண்டும்.

### உறுப்புரை 8

1. வானூர்தி ஏவுநர், 6 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்தியின் நோக்கத்துக்கு அவசியமான வரையில், எந்த ஆள் 1 ஆம் உறுப்புரையின் 1 (ஆ) என்னும் பந்தியில் கருதப்பட்ட செயலொன்றை வானூர்தியின் உள்ளே புரிந்துள்ளார் அல்லது புரியவிருக்கின்றார் என நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றனவோ அந்த ஆள் எவரையும் அவ்வானூர்தி வந்திறங்கும் ஏதேனும் அரசின் ஆள்புலத்தில் தரை இறக்கலாம்.

2. வானூர்தி ஏவுநர், இவ்வுறுப்புரையைப் பின்பற்றி ஆளொருவரை எந்த அரசில் தரை இறக்குகின்றாரோ அந்த அரசின் அதிகாரிகளுக்கு தரையிறக்கப் படும் அத்தகைய நிகழ்வைப் பற்றியும் அதற்கான காரணங்களையும் அறிவித்தல் வேண்டும்.

### உறுப்புரை 9

1. வானூர்தி ஏவுநர், வானூர்தி பதிவு செய்யப்பட்ட அரசின் தண்டனைச் சட்டத்துக்கிணங்க அவரது அபிப்பிராயப்படி பாரதூரமான ஒரு தவறாகவிருக் கின்ற செயலொன்றை வானூர்தியுள்ளே எந்த ஆள் புரிந்துள்ளாரென நம்பு வதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றனவோ அந்த ஆளெவ ரையும் அவ்வானூர்தி தரையிறங்கும் ஆள்புலத்திலுள்ள ஏதேனும் ஒப்பந்தமுறு அரசின் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கலாம்.

2. வானூர்தி ஏவுநர், சாத்தியப்படக்கூடியவாறான விரைவாக, அத்துடன் இயலுமாயின், முற்போந்த பந்திக்கிணங்க வானூர்தியின் உள்ளே இருக்கும் எந்த ஆளை ஒப்படைக்க முன்னுகின்றாரோ அந்த ஆளுடன் ஒப்பந்தமுறு அரசொன்றின் ஆள்புலத்தில் வந்திறங்குவதற்கு முன்னர், அத்தகைய ஆளை ஒப் படைப்பதற்கான தமது முன்னத்தையும் அதற்கான காரணங்களையும் பற்றி அத்தகைய அரசின் அதிகாரிகளுக்கு அறிவித்தல் வேண்டும்.

3. வானூர்தி ஏவுநர், இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க சந்தேகிக்கப் பட்ட தவறாளி எவரும் எந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகின்றாரோ அந்த அதிகாரிகளுக்கு, வானூர்தி பதிவு செய்யப்பட்ட அரசின் சட்டத்தின்கீழ் சட்டமுறையாக அவரது உடைமையிலுள்ள சான்றையும் தகவலையும் கொடுத்து தவுதல் வேண்டும்.

### உறுப்புரை 10

சமவாயத்துக்கிணங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு, எந்த ஆளுக் கெதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவோ அந்த ஆள் அனுபவித்த வினை களின் காரணமாக எவையேனும் நடவடிக்கைகளில் வானூர்தி ஏவுநரோ, வானூர்திப்பணியாளணியின் வேறு எவரேனும் உறுப்பினரோ, எவரேனும் பயணியோ, வானூர்தியின் சொந்தக்காரரோ அல்லது இயக்குநரோ அல்லது எந்த ஆளின் சார்பில் வானூர்திப்பயணம் நிறைவேற்றப்பட்டதோ அந்த ஆள் எவருமோ பொறுப்பாளியாக்கப்படுதல் ஆகாது.